# தினசரி சந்தை நிலவரம்: வாழ்க்கையில் ஏற்படுத்திய மாயாஜாலம்



திரு.சுல்தான் பாய்

எஸ்.பி.எஸ். மரவகை பழங்கள் கமிஷன் மண்டி

ஜமிய மஜிர் வளாகம்

ஒசூர் - 635109

தொலைபேசி: 08122009255

என் பெயர் திரு.சுல்தான் பாய். நான் ஒசூர் சந்தையில் வாழை பழ கடை வைத்துள்ளேன். ஒசூர் சுற்று வட்டாரங்களில் வாழை பழ உற்பத்தி மிகவும் குறைவு. அதனால் நான் திருச்சி மற்றும் மேட்டுப்பாளையம் சந்தையில் இருந்து பழங்களை வரவழைக்கிறேன். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலமாக தினசரி சந்தை நிலவர திட்டத்தினைப் பற்றி தெரிந்து கொண்டேன். பின்பு அதில் எனது அலைபேசி எண்னை பதிவு செய்து கொண்டேன். இப்பொழுது நான் தினசரி விலை நிலவரங்களை குறுந்தகவல்கள் மூலமாக பெற்று வருகிறேன். இப்பொழுது எனது வியாபாரத்தை சிறந்த முறையில் நடத்தி வருகிறேன்.அதனால் தரமான பழங்களை சரியான விலையில் பெறமுடிகிறது. தினசரி சந்தை நிலவர திட்டத்திற்கு எனது நன்றி.

**விற்பனை**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்திய தினசரி சந்தை நிலவர திட்டத்தின் மூலமாக எனது ஆண்டு லாபம் சில ஆயிரங்களில் இருந்து 1 முதல் 2 லட்சங்களாக அதிகரித்துள்ளது.

**எதிர் காலங்களில்**

1. ஒப்பந்த முறை விவசாய கூட்டமைப்பு
2. தினசரி போக்குவரத்து வசதி
3. நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப பயிர் செய்தல்

தினசரி சந்தை நிலவர திட்டம் மற்றும் துல்லிய பண்ணைய விவசாயத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுக்கு எனது நன்றி.